1971 ஜூலை 21]

கூடிய வகையில் இடங்கள் அமைக்க அரசு முன்வருமா, அப்படிப் பட்ட திட்டம் ஏதேனும் அமைச்சர் வைத்து இருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, இன்று கொடைக்கானல் போன்ற மற்ற இடங்களில் பள்ளிக்கூடம் சம்பந்தப்பட்ட உணவு விடுதிகளேயும் ஹாஸ்டல்களேயும் எடுத்து, அதைக் கோடைக்காலங்களிலே வரும் பயணிகளுக்கு வழங்கலாம் என்ற திட்டத்தை அரசு மேற்கொள்கிறது. மத்திய அரசு ரூ. 25 கோடி இந்தச் சுற்றுலாத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிருர்கள். அந்தத் திட்டத்தில் தென் மாநிலத்திற்கு என்று தனியாக எந்தத் தொகையும் ஒதுக்கப்படவில்லே. அதை அந்த மாநிலத்தில் கூறி, தென் மாநிலங்களுக்கு ரூ. 7 அல்லது ரூ. 10 கோடி வரை ஒதுக்கி, அந்தந்த மாநிலத்தில் உள்ள மக்கள், உள்நாட்டிலே பயணம் செய்யும் மக்களுக்கு வசதிகளேச் செய்து தரும் காரியங்களேச் செய் வதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

Bonus for workers of State Transport Service

* 361. Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether a section of the workers of the State Transport Service have not been paid bonus for 1970-71; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையில் அக்டோபர் தொடங்கி செப்டம்பர் முடிய உள்ள காலப் பகுதிக்குப் பூரிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1969 அக்டோபரில் தொடங்கி 1970 செப்டம்பரில் முடிந்த பூரிப் பூதிய ஆண்டிற்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் பூரிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது. 1970 அக்டோபரில் தொடங்கி 1971 செப் டம்பரில் முடியும் ஆண்டுக்குரிய பூரிப்பூதியத் தொகை பற்றித் தக்க தருணத்தில் அறிவிக்கப்படும்.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லே.

திருப்பரங்குன்றம் தேவஸ்தானம்.

* 362 வினு—திரு. சொ. காவேரிமணியம் : மாண்புமிகு அற நிலேயத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தேவஸ்தானத்தை தனி தேவஸ்தான மாக ஆக்க, அறநிலேயப் பாதுகாப்பின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனேயிலுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அது அரசின் பரிசிலனேயில் உள்ளது

[1971 ஜூலை 21

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தேவஸ்தானமானது அழகர்கோவில் தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இவை இரண்டு தேவஸ்தானங்களுமே தனித்தனியாக மிகச் சிறந்த முறையில் வளர்ந்துள்ள தேவஸ்தானங்களாக இருப்பதால் இவை இரண்டையும் பிரித்து இவை தனித்தனியாக இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடுதான் இணைக்கப்பட்டிருக்கிறது. கள்ளழகர் கோவிலோடு இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் இன்னொரு தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருப்பது பிரிக்கப்படுமா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும் திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் மட்டுமின்றி எட்டு தேவஸ்தானங்கள் மதுரை மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடு இணைந்திருக்கின்றன. இவற்றில் திருப்பரங்குன்றம் தேவஸ்தானத்தைப் பிரிப்பதற்கு அந்த தேவஸ்தானத்தைச் சார்ந்த அறங்காவலர்களும் மதுரை ஸ்ரீ மீனாட்சி தேவஸ்தானத்தைச் சார்ந்த அறங்காவலர்களும் அதற்கான காரணங்களைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றார்கள். மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடு இணைந்துள்ள துணைக் கோவில்களுக்குப் போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் அவற்றைப் பிரிக்காமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதால் இவையனைத்தும் இணைந்திருக்கின்றன. இருந்தாலும் இப்படி ஒரு சில தேவஸ்தானங்களைப் பிரிப்பதற்கான காரணங்கள் இருப்பதால் அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கின்றது.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி திருப்பரங்குன்றம் ஊராட்சி மன்றம் ஏற்கெனவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. திருப்பரங்குன்றத்தைச் சுற்றியுள்ள பதினாறு கிராமங்களைச் சார்ந்தவர்களும் இதுபற்றி மனுக் கொடுத்திருக்கின்றார்கள். கடந்தகாலத்தில் திரு. அக்கினிராஜ் அவர்களும் உறுப்பினர் என்ற முறையில் பல முறை இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதுபற்றி எவ்வளவு சீக்கிரத்தில் முடிவெடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தீர்மானங்களும் கோரிக்கைகளும் அரசாங்கத்

1971 ஜூலை 21]

திற்கு வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கின்றோம். பரிசீலனை முடிந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பிரசித்திபெற்ற சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் தேஸ்தானம் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் தேவஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இவற்றைப் பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே பேசப்படுவது திருப்பரங்குன்றத்திலுள்ள தேவஸ்தானத்தைப்பற்றியது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

கதர், கிராமத் தொழில்கள்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the Second Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Khadi and Village Industries.

3. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

(இ) கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,12,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஓமினிபஸ் போக்குவரத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 52,12,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.